இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 29 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 22 – செவ்வாய்க்கிழமை 08 செப்டம்பர் 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 29 : Thiruvalluvar Year - 2057 - Aavani 22 - Tuesday 08 September 2026 - Chennai 8 Pages ₹ 5.00



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை, சென்னை திருவான்மியூரில் அமைந்துள்ள இராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில், "கலைஞர் செய்திகள்" தொலைக்காட்சியின் செய்திகள் பிரிவுத் தலைவர் – எழுத்தாளர் ப.திருமாவேலன் – திருமதி ரேணுகா திருமாவேலன் ஆகியோரின் புதல்வி டாக்டர் ரே.தி.அமிர்தா, டாக்டர் சு. பாலசுப்பிரமணியன் – திருமதி சுதா பாலசுப்பிரமணியன் ஆகியோரின் புதல்வர் டாக்டர் ரபிந்திரன் ஆகியோரின் திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடன் உள்ளார்கள்.

## 'டம்மி' முதலமைச்சரின் பதிலுரை, மனப்பாடம் செய்து ஒப்பித்தல் போட்டி போல் உள்ளது!

## பேரவையில் ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதா?

# முதலமைச்சரின் ஆலோசகர்களின் ஊழல்களை அம்பலப்படுத்துவேன்!

## வெளிநடப்புக்குப் பின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டியில் எச்சரிக்கை!

**சென்னை, செப். 8-**

**சட்டப் பேரவையில் நேற்று, காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து முதலமைச்சர் விஜய் பேசியதைத் தொடர்ந்து, கழகத்தின் சார்பில் பேசிட எதிர்க் கட்சித் தலைவரான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து, சட்டப் பேரவையிலிருந்து கழகம் வெளிநடப்புச் செய்தது.**

**அதன்பின் தலைமைச் செயலக வளாகத் தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "சட்டப் பேரவையில் முதலமைச்சர் விஜய், ஆதாரமில்லாமல் அவதூறுக் குற்றச் சாட்டுகளை அள்ளி வீசுவதா?" எனக் கடும் கண்டனம் தெரிவித்தார்.**

**மேலும் அவர், "முதலமைச்சர் விஜய்யின் ஆலோசகர்களின் ஊழல்களை ஆதாரங் களுடன் அம்பலப்படுத்துவேன்!" என்று சூளுரைத்தார்.**

சட்டப் பேரவையிலிருந்து கழக உறுப் பினர்கள் அனைவரும் வெளி நடப்பு செய்த பின், தலைமைச் செயலக வளாகத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது :-

பத்திரிகை நண்பர்களுக்கு, முதலில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

கடந்த வியாழக்கிழமை அன்று, காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில், எதிர்க்கட்சியின் சார்பாக, எதிர்க்கட்சித் தலைவராக நான் உரையாற்றி இருந் தேன். கிட்டத்தட்ட 35 நிமிடங்கள் பேசி யிருந்தேன். பல்வேறு குற்றச்சாட்டுகளைச்



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டப்பேரவையில் முதலமைச்சரின் பதிலுரையைத் தொடர்ந்து, கழகத்தின் சார்பில் பேசிட பேரவைத் தலைவர் அனுமதி மறுத்ததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்த பின், தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த காட்சி.

சொல்லியிருந்தேன். 116 நாட்கள் த.வெ.க. ஆட்சியில், சட்டம் - ஒழுங்கு எந்த அளவுக்கு சீர்கெட்டுள்ளது என்று மிகத் தெளிவாக, விளக்கமாக ஆதாரங்களுடன் பேசி யிருந்தேன்.

### திசை திருப்பாமல் பதில் சொல்லக் கேட்டிருந்தேன்!

"திசைதிருப்பாமல் பதில் சொல்லுங்கள்" என்று, அரசுக்கு, குறிப்பாக முதலமைச் சருக்கு 15 கேள்விகள் வைத்திருந்தேன். "இதற்கெல்லாம் பதில் சொல்லுங்கள். திசை திருப்பாமல் நேரடியாக நாங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்" என்று கேட்டிருந்தேன்.

இன்று, முதலமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்லியிருக்கிறார். கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் அவர் பேசினார். அதில் முதல் 15 நிமிடங்கள், காவல் துறை சார்பாக என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கி றோம், என்று பட்டியலிட்டார். நாங்கள் எல் லாம் அதை அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்தோம். அதன்பின், 15-வது நிமிடத் துக்குப் பிறகு, எந்தவித ஆதாரமும் இல்லாத குற்றச்சாட்டுகளை எங்கள்மீது வைக்க ஆரம்பித்தார். நான் வியாழக் கிழமை பேசும்போது, இதையும் குறிப்பிட்டுப் பேசினேன். "நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டோம் என்பதை நம்புங்கள். தி.மு.க. ஆட்சியில் இல்லை என்பதை நீங்கள் நம்ப வேண்டும். உங்களின் ஆட்சி அமைந்துவிட்டது என்பதை தயவுசெய்து நம்புங்கள். எங்கள் மேல் பழியைப் போடா மல், இந்த மூன்று மாதங்களில் என் னென்ன செய்திருக்கிறீர்கள், என்னவெல் லாம் செய்யப்போகிறீர்கள் என்று பதில் சொல்லுங்கள்" என்று கேட்டிருந்தோம்.

### பொய்யான குற்றச்சாட்டுகள்!

மீண்டும் தி.மு.க. ஆட்சி நடக்கிறது என்ற அதே நினைப்பில், முதலமைச்சர் அவர்கள் பொய்யான குற்றச்சாட்டுகளை, கட்சிக் கூட் டங்களில் எங்களின் உறுப்பினர்கள் வெளி யில் பேசியதை, இந்த அரசின்மீது வைத்த விமர்சனங்களை எல்லாம் உள்ளே வந்து பேசி, அவற்றையெல்லாம் அவைக் குறிப் பில் பதிவேற்றம் செய்ய ஆரம்பித்தார். அப் போது, நானும் எங்கள் சட்டமன்ற உறுப்பி னர்கள் எல்லாரும் எழுந்து, சபாநாயகரிடம், "முதலமைச்சர் வெளியே பேசுவதைப் பற்றி, இங்கு பேசுகிறார். எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.. நாங்கள் பதில் சொல்ல வேண்டும்" என்று கேட்டோம். ஆனால், எங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட் டது. தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், பல தவறான, பொய்யான குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காக வைத்துக்கொண்டு இருந் தார். அவர் கூறும் எந்தக் குற்றச்சாட்டுக்கும் நாங்கள் பதில் சொல்ல எங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது.

### எங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது!

முதலமைச்சர் பேசி முடித்தவுடன், நாங் கள் மீண்டும் எழுந்து கேட்டோம். "எங்க ளுக்கு வாய்ப்புக் கொடுங்கள், எங்கள்மீது குற்றச்சாட்டு வைத்துள்ளார், அதற்கு நாங் கள் பதில் சொல்ல வேண்டும்' என்று கேட் டோம். ஆனாலும் எங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. "எதிர்க்கட்சித் தலைவ ருக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்" என்று முத லில் ஒப்புக்கொண்டார். ஆனால், என்ன அழுத்தம் வந்தது என்று தெரியவில்லை. முதலமைச்சர் சொன்னதாலா, அமைச்சர் பெருமக்கள் சொன்னதாலா என்று தெரிய வில்லை. திடீரென்று தனது போக்கை மாற்றிக்கொண்டு, "அனுமதிக்க முடியாது" என்று சொல்லிவிட்டார்.

எங்களின் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக, முதலமைச்சரின் பேச்சை முழுமையாகப் பார்த்துவிட்டு, வெளிநடப்புச் செய்திருக்கி றோம். நாங்கள் வைத்த ஒரு கேள்விக்குக் கூட முதலமைச்சர் பதில் சொல்லவில்லை.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## கொடநாட்டில் 'வாட்ச்மேன்' வேலை பார்த்த முதலமைச்சர்!

